# Psychological Elements in Proverbs

**A. Arul Anishka**
*Registration No. - 2421315012001, Full-Time Research Scholar*
*Department of Tamil, S.T Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. N. Nisha Navis**
*Assistant Professor, Department of Tamil*
*S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniyam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255870

**Abstract**

*Proverbs are the primary repository of the life history of a country and a society. Such proverbs are full of psychological concepts. If the human body is to be in proper motion, then his mind must be in a balanced state. By understanding the activities of a person, his thoughts and intentions can be known. The status of a person who excels in life and rises in virtues will also rise in the society. Like food chains, education, virtue and social progress are related to each other. This article reveals the hidden ideas hidden in such proverbs.*

***Keywords:*** *Psychological, In Memory, Experiences, Food Chain, Tendons*

**References**

1. Adil Shimmibel A.D. Holy Bible Proverbs and Tamil Proverbs, The Parker, 293, Ahmed Mall, 2nd Floor, Royapettah Highway, Royapettah, Chennai 600 014, First Edition 2006.
2. Ravichandran T. Ku, Gilliban Butler, Fritha McManus A Brief Introduction to Psychology, Mani Publishing House, Chennai 5, 3rd edition 2017.
3. Queen Elizabeth The. Proverbs in the Law, Amsa Publishing House 9 A Seckmillan Colony, Thangainallur, Chennai 600 061. First edition 2007.
4. Ramalingam, Panja, Human Psychology, Saradha Publishing House, Chennai, Second Edition 2007
5. Rajamanickam, M. Social Psychology, Sabha Nayakam Publications, 176, Keelaratha Road, Chidambaram 608 001 First Edition 2016.
6. Kapilar Way, Thirukkural Simple Text, Poongodi Publishing House, Chennai, Seventh Edition 2005.
7. Sakthi Srinivasan, Victory Selection, Mahalakshmi Publishing House, 2014
8. Subpurediyar N. Educational Psychology, S. Vasan Company, Mylapore, Chennai, 1962.
9. Nagaiah J. Proverbs that develop character, Tamil Thai Publishing House, Chennai 26, first edition 2009.
10. Muthukumaran, Proverbs to Know, Senthamil Publishing House 15/21. Teachers Guild Colony, Rajaji Nagar Extension, Villivakkam, Chennai 600 049, First Edition 2009
11. Leela S World Proverbs, Sumathi Publications, 4/20, Thiruvalluvar Street. Eekadduthangal, Chennai 600 032, First Edition 2011

# பழமொழிகளில் உளவியல் கூறுகள்

***அ. அருள் அனிஸ்கா***
பதிவு எண் - 2421315012001, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்க் கலை ஆய்வகம், தெ.தி இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
மனோான்மணியம் சுந்தரனாா் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் நே. நிஷா நேவிஸ்***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்
மனோான்மணியம் சுந்தரனாா் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*பழமொழியானது ஒரு நாட்டின் ஒருசமூகத்தின் முதன்மையான வாழ்வியல் வரலாற்றின் பெட்டகமாக வாய்மொழி இலக்கியமான பழமொழி காணப்படுகிறது. இத்தகைய பழமொழிகளில் உளவியல் கருத்து க்கள் நிறைந்து காணப்படுகின்றன மனித உடல் நிலை சரியான இயக்கத்தில் இருக்க வேண்டும் எனில் அவனது மனம் சம நிலையில் இருக்க வேண்டும். மனிதனின் செயல்பாடுகளைக் கொண்டேன்அவனது எண்ணங்களையும் நோக்கங்களையும் அறிய முடியும் கல்வியில் சிறந்து நற்பண்புகளில் உயர்ந்துவாழ்ந்து வரின் சமூகத்தின் நிலையும்உயரும். உணவுச் சங்கிலிகளைப் போல கல்வியும்நற்பண்பும்சமூதாயஉயர்வும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதே. இத்தகைய பழமொழிகளில் உளவியல் ரீதியாககருத்துக்கள் மறைந்திருக்கும் கருத்துக்களை வெளிக்கொண்டுவருவதாகஇக்கட்டுரை அமைகிறது.*
***குறிப்புச் சொற்கள்:*** *உளவியல், நனவாக, அனுபவப் பிழிவுகள், உணவுச்சங்கிலி, தசைநார்கள்.*

## முன்னுரை

ஒரு குழு மக்களிடையே வழங்கி வரும் பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கை, கதை, பழமொழி, வாய்மொழி வரலாறு, விடுகதை, வாய்மொழி பாடல், கலை, மருத்துவம் போன்றவற்றை கூறுவது நாட்டுப் புறவியல் ஆகும். இது காலப் போக்கில் இலக்கியங்களாக உருவெடுத்தன. இவற்றில் முக்கியமானதாகவும் தொன்மை தன்மை நிறைந்து இருப்பதும் முதுமொழியாகிய பழமொழிகளே ஆகும். பழமொழிகள் வாய்மொழி இலக்கியங்களில் மிகவும் பழமையானது. மனிதனால் மனிதன் அறிய மனிதளே வழங்கியது இந்த பழமொழிகள். வாழ்க்கைக்கு தேவையான ஆழ்ந்த கருத்துக் களையும் அனுபவத் தொகுதிகளாக பழந்தமிழர் நமக்குத் தந்துள்ளனர். அத்தகைய பழமொழிகளில் மருத்துவம், வானியல், சுற்றுச்சூழல், வேளாண்மை, சமூகவியல், உளவியல், மண்ணியல், பொருளாதாரவியல் ரீதியான பழமொழிகள் அதிகம் காணப்படுகின்றன. இதில் உளவியல் என்பது மனம் மற்றும் நடத்தை பற்றிய அறிவியல் ஆய்வு ஆகும். இது மனிதர்கள் மற்றும் விலங்குகளின் நடத்தை, நனவான மயக்கமற்ற நிகழ்வுகள், எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நோக்கங்கள் போன்ற மன செயல்முறைகளை கருப்பொருள்களாக கொண்டுள்ளன. மக்களின் அனுபவங்களில் பிறந்த பழமொழிகளில் உளவியல் கருத்துக்களும் காணப்படுகின்றன. இது நம் பழந்தமிழரின் அறிவு வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

**மனம் சார்ந்த பழமொழிகளில் உளவியல்**

பாமர மக்களின் அனுபவ பிழிவுகளே பழமொழிகள். இவை எதுகை, மோனை, உவமை, உருவகம், வினா, ஐயம், இயல்பு, முரண், எதிர்மறை, அணி, அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி, உணர்ச்சி, கற்பனை, இசைநயம், கவிதைநயம் என பல்வேறு இலக்கிய உத்திகளை கொண்ட ஒரு எளிய வடிவமாக உள்ளது. இத்தகைய பழ மொழிகளில் மனதை மையப்படுத்திய பல கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் உளவியல் கருத்துக்களும் பொதிந்திருக்கின்றன. உளவியல் என்பது உள்ளத்தின் செயல்பாடுகளையும் நடத்தைகளையும் அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்றல் பண்பாட்டு ஒழுங்கு முறையாகும். இது ஆழமான புரிதலை பெறவும்மக்கள்தங்கள்சொந்தசெயல்களை பற்றிய நுண்ணறிவுகளை அடையவும் மற்றவர்களை பற்றி சிறந்த புரிதலை பெறவும் உதவுகிறது. மனித உடல் நலம் சரியான இயக்கத்தில் இயங்க வேண்டும் எனில், அவனது மனம் சமநிலையில் இருக்க வேண்டும். இதைத்தான் வள்ளுவர்,

**"மனநலம் மன்னுயிர்க் காக்கும் இனநலம்**
**எல்லாப் புகழுந் தரும்"**

**(திருக்குறள் எளிய உரை, ப. 108)**

அனைத்து உயிர்களுக்கும் மனநலம் ஒன்றே சிறப்பானது என்று கூறுகிறார்.

நமது மனது சீரான நிலையில் இருக்கு மேயானால் அனைத்தையும் சாதிக்க முடியும் என்கிறது உளவியல். இதையே,

**"மனம் இருந்தால் மார்க்கமுண்டு"**

**(அறிய வேண்டிய பழமொழிகள், ப.62)**

என்ற முதுமொழி நமக்கு உணர்த்துகிறது. மனஉறுதியேமனிதவாழ்க்கைக்குமுக்கியம். இது சிந்தனை, நோக்கு, உணர்ச்சி, கற்பனை போன்றவற்றை வெளிப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் செய்கிறது. இவைகளை மனதில் இருத்தி ஆராயும் போது தான் புது வழிகள் பிறக்கின்றன.

**"மனம் உண்டானால் இடம் உண்டாகும்"**

**(அறிய வேண்டிய பழமொழிகள், ப 63)**

என்ற பழமொழியை எடுத்துக் கொண்டால் மனம் இருந்தால் வழிப்போக்கருக்கு தன் வீட்டு திண்ணையில் படுக்க இடம் கிடைக்கும் என்றும் மனம் இருந்தால் எத்தனை வருட பகையாக இருப்பினும் பகைவனின் நிலையிலிருந்து அதை புரத தன்னையே ஆராய்ந்து அவரை மன்னித்து இறைவன் குடிகொள்ளும் மனதில் அவருக்கும் இடம் கொடுக்க நினைக்கலாம் என்றும் பொருள் கொள்ளலாம். மனமிருந்தால் மட்டுமே அனைத்தையும் சாதிக்க முடியும் என்ற கருத்துக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மனமே அனைத்திற்கும் ஆதாயம். மனம் இருந்தால் மலையே தகர்க்கும் தைரியம் கிடைக்கும். இது திருமணத்திற்கும் பொருந்தும்.

**"மனப்பொருத்தம் இருந்தால் மற்ற பொருத்தம் பார்க்க வேண்டுமா?"**

**(அறிய வேண்டிய பழமொழிகள், ப. 63)**

என்ற பழமொழி மன பொருந்தியிருப்பின் சாதி, இனம், கிழமை, நாள், நட்சத்திரம், சாஸ்திரம் என எதுவும் தேவையில்லை. அவர்களே அவர்களது வாழ்வை சிறப்பாக வாழ்வும் வாழ்ந்து காட்டவும் செய்வார்கள் என்பதை இப்பழமொழி வாயிலாக அறியலாம். மனதில் இருந்தே அனைத்து உணர்ச்சிகளும் பிறக்கின்றன. அவை நன்மையும் தரலாம் தீமையும் தரலாம். அதை மனதில் நிறுத்தி ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது பழமொழியின் கருத்தாகவும் உளவியலின் முக்கிய கூறாகவும் உள்ளது.

**மனித செயல்பாடுகள் சார்ந்த பழமொழிகளில் உளவியல்**

வாய்மொழி இலக்கியத்தில் பழமொழிக்கு இன்றியமையாத இடம் உண்டு. அவற்றுள் சில வெளிப்படையாக உணர்த்தும் அர்த்தங்களுடனும் பல உள் அர்த்தங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. சுருங்கச்

சொல்லி விளங்க வைக்கும் இப்பழமொழிகளில் உவமைகளும் உருவகங்களும் பரவலாக இடம் பெற்றுள்ளன. மனிதனின் செயல்களைக் கொண்டு அவனது எண்ணங்களையும்நோக்கங்களையும்அறிய முடியும். உளவியல் கண்ணோட்டத்தில் மனித செயல்பாடுகளை மனித நடத்தைகள் என்று வரையறுகின்றனர். மானிட நடத்தைகளும் மன செயல்பாடுகளும் தனிமனித உளவியல் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. தனிமனித மேம்பாடு, குடும்ப மேம்பாட்டிற்கும் சமூக மேம்பாட்டிற்கும் அடித்தளமாக அமைகிறது. எனவே உளவியல் என்பது மானிட நடத்தைகளையும் மூளை செயல்பாடுகளையும் அறிவியல் கண்கொண்டு ஆராய்வதே ஆகும்.

மனித நடத்தையை அவனது பசி, பழக்க வழக்கம், அழகு, கலாச்சாரம், பண்பாடு, சமூக நடத்தை, கல்வி, பொருளாதாரம்என பலவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. இதில் பசி என்பது உணவுக்கான உந்து சக்தி. பசி எடுக்கும் போது வயிற்றின் தசைநார்கள் சுருங்குவதாலும் குருதியில் ஏற்படும் சில ரசாயன மாற்றங்களாலும் குருதியில் உள்ள புரத அமிலங்களின் அளவு குறைவதாலும் ஏற்படுகிறது. இருப்பினும் பசியின்றி உண்வினை உண்ணும் போது உடல் பருமன், செரிமான குறைபாடு போன்ற உடல் ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்கிறது உளவியல். இதை, அன்றே நம் தமிழ் மரபு,

**“பசித்துப் புசி”**

**(பழமொழிகளில் நீதிக்கருத்துக்கள்)**

என்று கூறியிருக்கிறது. பசித்த பின் மட்டுமே உணவுகளை உண்ண வேண்டும் என்றும்,

**“பசி வந்தால் பத்தும் பறக்கும்”**

**(உலக பழமொழிகள், ப.84)**

என பசியால் மனிதனது அறிவுநிலை மக்கிப் போய் தன்னையே மறந்து விடுவான் என்றும் கூறுகிறது. பசியும் நீர் வேட்கையும் தமிழர் நோய்என்கின்றனர். பசியின்முக்கியத்துவத்தை காப்பிய நூல்களின் ஆசிரியர்களும் வெளிப்படுத்த தவறியதில்லை.

ஒருவர் செய்கின்ற செயலை வைத்து தான் அவனின் எண்ணங்களையும் நடத்தைகளையும் புரிந்து கொள்ள முடியும். அவை நல்ல எண்ணங்களா? தீய எண்ணங்களா? என்பதை அவனின் முகத்தை வைத்தே அறிந்து கொள்ளலாம். இதை,

**“அகத்தின் அழகு முகத்தில் தெரியும்”**

**(உலக பழமொழிகள், ப. 5)**

என்ற பழமொழி நமக்கு உணர்த்துகிறது. நமது சிந்தனைகளை முகமே காட்டி கொடுக்கும். இதில் கண்களின் பங்குமிகச் சிறப்பானது. இது அவனது தூக்கமின்மை, வறுமை, துக்கம், மகிழ்ச்சி, சோர்வு என்ற அனைத்தை நிலைகளையும் காட்டிக் கொடுக்கும் சிறப்பான பணியை செய்கிறது. சிலர்தனது முகங்களை அப்பாவிகளாக மாற்றி தம் எண்ணங்களை மறைத்து தவறுகளையும் செய்கின்றனர். ‘பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்’ என்பார் போல் அவர்களும் ஒரு நாள் கையும் களவுமாக பிடிபட்டு தனது தவறுகளை புரிந்து கொள்வர்.

**கல்வி மற்றும் சமூகம் சார்ந்த பழமொழிகளில் உளவியல்**

மனித வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைவது கல்வியே. அந்த கல்வியை பிச்சை எடுப்பினும் கற்க வேண்டும் என்பர். இதை,

**“கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே”**

**(வெற்றிவேற்கை, ப. 35)**

என்று வெற்றிவேற்கையும் கூறுகிறது. கல்வியின் சிறப்பை கூறாத இலக்கியங்களே இல்லை என்று தான் சொல்லவேண்டும். உலகப் பொதுமறையான திருக்குறள்,

**“கற்க கசடற கற்பவை கற்றுப்பின்**
**நிற்க அதற்குத் தக”**

**(திருக்குறள் எளிய உரை)**

கல்வியை எந்த ஒரு குறையும் இல்லாமல் கற்று அதன்படி நடக்க வேண்டும் என்று கூறுவது அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த கல்வியை சரியான வயதில் கற்க வேண்டும் என நம் தமிழரின் அனுபவப் பிழிவுகள் கூறுகின்றன.

**"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"**

***(அறிய வேண்டிய பழமொழிகள், ப. 24)***

என்ற பழமொழியில் ஐந்து வயதில் கற்கும் நுண்ணறிவு ஐம்பது வயது வரையில் மாற்றமின்றி அப்படியே இருக்கும் என்கிறது. சிறுவயதில் கற்பதை விடுத்து பெரிய வயதில் கற்கலாம் என நினைப்பது பயனில்லாதது.

இதையே உளவியல், நுண்ணறிவும் அறிவுத்திறனும் மிகக் கற்க தூண்டும் செயல்களுமே கல்வி உளவியலில் முக்கியமானது. 5 வயதில் ஒருவரிடம் காணப்படும் நுண்ணறிவு முதுமை வரையிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அறிவை பெருக்கிக் கொள்ளலாம் ஆனால் நுண்ணறிவு நிலையானது. எனவே குழந்தை பருவத்திலேயே நுண்ணறிவை வளர்க்க முயல வேண்டும் என கூறுகிறது. இந்த கருத்தை முன்னிறுத்தி, பினே, சைமன் என்ற இரு உளவியல் வல்லுனர்களும் 1911 ஆம் ஆண்டு 3 வயது 16 முதல் வயது வரை உள்ள குழந்தைகளின் நுண்ணறிவு நிலையை ஆராய்ந்து, அதை அறிக்கையாகவும் வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியின் மற்றுமொரு முக்கியமான செயல் எதுவெனில், நற்பண்புகளை கற்பதும் அதை செயல்படுத்துவதுமே. கல்விகள் கற்று பட்டங்கள் பல பெற்றிடினும் நற்பண்பு இல்லையேல் அவர் கற்ற கல்விக்கு பயனில்லாமல் போய்விடும். மாணவர்களிடம் நற்பண்புகளை வளர்க்கும் இடத்தில் முதலில் குடும்பங்களும் இரண்டாவது இடத்தில்கல்வி நிலையங்களும்உள்ளன. மாணவர்களிடத்தில் வளர்க்க வேண்டிய நற்பண்புகள் ஏராளமானவை. ஒரு சமுதாயம் ஏற்றமுடையாதாகவும் சிறந்த விழுமியங்களை பெற்றதாகவும் மாற கல்வி நிலையங்களில் உள்ள பாடத்திட்டங்களில் நற்பண்புகள் கற்பிக்கப்பட வேண்டும்.

**"வினை விதைத்தவன் வினை அறுப்பான்**
**திணை விதைத்தவன் திணை அறுப்பான்"**

***(அறிய வேண்டிய பழமொழிகள், ப. 69)***

இந்த பழமொழி இரு கருத்துக்களை நமக்கு உணர்த்துகிறது. 'திருடனையும் அறிவாளியாக்க வல்லது' (பழமொழியில் நீதி கருத்துக்கள்) என்ற பிரெஞ்சு நாட்டின் கூற்றைப் போல, பழமொழியானது தவறான மனிதர்களையும் திருத்திவிடும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக மேற்கண்ட பழமொழி அமைகிறது. இந்த பழமொழி பெரியவர்களும் கல்விப்பயிலும் மாணவர்களும் நற்பண்புகள் சிறந்து வளரும் வகையில் கூறப்பட்டவை. இயற்பியலில், நாம் மிக வேகத்திலும் மிக உயரத்திலும் ஒரு பந்தை எறிகிறோம் எனில், அதே வேகத்துடன் அது நம்மிடம் திரும்பி வந்துவிடும் என்ற செயல்பாட்டின் மூலம் பழமொழிகளில் இயற்பியல் கருத்துக்களும் உள்ளன என்பது தெளிவாகிறது. கல்வி நிலையங்களில் இத்தகைய கருத்துக்கள் கற்பிக்கப்படும் போது சமுதாயத்தில் மாற்றம்ஏற்படுகிறது.

**"சாட்சிக்காரன் காலில் விழுவதை விட**
**சண்டைக்காரன் காலில் விழலாம்"**

***(உலக பழமொழிகள், ப. 57)***

என்ற பழமொழி ஒரு சமூகம் சார்ந்த புரிதலை நமக்கு கொடுக்கிறது. தவறு செய்ததை பார்த்தவனிடம் சென்று முறையிடுவதை விட சண்டைக்காரனிடம் சென்று மன்னிப்பு வேண்டுவது சரியானது. இதனால் பகையும் முடியும் பழியும் முடியும் என சமூகத்தின் நலனுக்கான செய்திகளை பழமொழி எடுத்துக் கூறுகிறது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாடு, நம்பிக்கை, அன்றாட நடப்பியல் முறைகளை பழமொழி தன்னகத்தை கொண்டுள்ளது. இத்தகைய சமுதாயத்தில் கூடி வாழ்ந்தால் பல நன்மைகளை அடைய முடியும்என

நம் முதுமொழி கூறுவது பழந்தமிழரின் சமூக வாழ்வையும் ஒற்றுமையையும் காட்டுகிறது.

**“கூடி வாழ்ந்தால் கோடி நன்மை”**

**(உலக பழமொழிகள், ப. 51)**

தனி ஒரு குடும்பமாக இருந்து, படும் துன்பங்களை விட அனைவரும் இணைந்து பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தால் கோடி கணக்கான நன்மைகளை அடையலாம் என இந்தக் கால பிரிவினைகளுக்கான தீர்வை நம் முன்னோர் அன்றே வாய்மொழியாக பரப்பி வந்துள்ளன என்பது வியப்புக்குரியது.

## நிறைவுறை

பழமொழிகள் மக்களிடம் என்றும் புழக்கத்தில் இருக்கும் நாணயங்கள் போன்றவை. எல்லா துறைகளிலும் சிறந்திருப்பது போல உளவியல் துறையிலும் பழமொழி தன்னகத்தை தனி இடத்தை பிடித்துள்ளது. அறிவியல் சிந்தனைகள், உளவியல் கருத்துக்கள், வானியல் சார்ந்த கருத்துக்கள், மண்ணியலின் நிலை, மக்களின் எண்ணங்கள், உலக பொருளாதாரம் சார்ந்த கருத்துக்கள் என எல்லா வகையான கருத்துக்களும் பழமொழிகளில் நிறைந்து காணப்படுகின்றன. நமக்காக நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற எச்சங்களான பழமொழிகளை வண்ணத்துப் பூச்சிகளுக்கு ஒப்பிடலாம். சிலவற்றைப் பிடித்துக் கொள்கிறோம், சிலவற்றை பிடிக்க தவறி விடுகிறோம். ஆயினும் இவைகளில் இருந்து பழந்தமிழரின் பன்முகங்களையும் எதிர்நோக்கும் தன்மையும் நம்மால் அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. ஆடில் ஷிம்மிபெல் ஆ. த, பரிசுத்த வேதாகம நீதிமொழிகளும் தமிழ் பழமொழிகளும் ஒப்படைவு, தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், 2-வது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை, முதல் பதிப்பு 2006.
2. இரவிச்சந்திரன் த. கு, கில்லிபன் பட்லர், ஃபிரிதா மெக்மனஸ் உளவியல் மிகச் சுருக்கமான அறிமுகம், மணி பதிப்பகம், சென்னை 5, 3-ஆம் பதிப்பு 2017.
3. இராணி எலிசபெத் தே. பழமொழிகளில் நீதிக்கருத்துக்கள், அம்சா பதிப்பகம் 9 A சேக்மில்லன் காலனி, தங்கைநல்லூர், சென்னை, முதல் பதிப்பு 2007.
4. இராமலிங்கம். பாஞ், மானிட உளவியல், சாரதா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 2007.
5. இராஜமாணிக்கம். மு. சமூக உளவியல், சபா நாயகம் பப்ளிகேஷன்ஸ், 176, கீழரத வீதி, சிதம்பரம். முதல் பதிப்பு 2016.
6. கபிலர் வே, திருக்குறள் எளிய உரை, பூங்கொடி பதிப்பகம், சென்னை, ஏழாவது பதிப்பு 2005.
7. சக்தி சீனிவாசன், வெற்றி வேற்கை, மகாலட்சுமி பதிப்பகம், 2014
8. சுப்புரெட்டியார் நா, கல்வி உளவியல், எஸ் வாஸன் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை 4, 1962.
9. நாகய்யா ஜெ. பண்பை வளர்க்கும் பழமொழிகள், தமிழ்த்தாய் பதிப்பகம், சென்னை 26, முதல் பதிப்பு 2009.
10. முத்துக்குமரன், அறிய வேண்டிய பழமொழிகள், செந்தமிழ் பதிப்பகம் 15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை, முதல் பதிப்பு 2009.
11. லீலா எஸ், உலகப் பழமொழிகள், சுமதி பப்ளிகேஷன்ஸ், 4/20, திருவள்ளுவர் தெரு, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032, முதல் பதிப்பு 2011.

## இணையவழி

1. https://ta.wikipedia.org
2. https://www.uyirpu.com
3. https://tamil.scitechnol.com
4. https://www.britannica.com